DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 42 / 2021
Deposition of PW1- திரு.ராசையா

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08.04.2025.

எதிரி ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355-ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1.) நான் SSLC படித்து முடித்து ஆண்டிபட்டி வேளாண்மை துறையில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். நான் வேலை பார்த்துக் கொண்டிருந்த சமயத்திலேயே ஸ்ரீ கணேஷ் பைனாஸ் என்ற பெயரில் பணத்தை வட்டிக்கு கொடுத்து வாங்கி கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. உரிமம் பெறாமல் நான் வட்டிக்கு பணம் கொடுத்து வாங்கி வந்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் எதிரி செல்வி என்பவரின் மகன் பிரபாகரன் என்பவரை எனக்கு நன்கு தெரியும். பிரபாகரன் என்னிடம் வட்டிக்கு பணம் வாங்கி திருப்பி கொடுத்து வரும் பழக்கம் வைத்திருந்தார் என்றால் சரியல்ல.

2.) ஆண்டிபட்டி, ஜக்கம்பட்டியில் இருக்கும் பொன்னுச்சாமி என்பவர் என் உடன்பிறந்த தம்பி ஆவார். இந்த வழக்கின் எதிரி செல்வி என்பவர் எனக்கு நேரடியாக பழக்கம் இல்லை என்று சொன்னால் சரியல்ல பழக்கம் உண்டு. நான் வழக்கின் எதிரி செல்வி என்பவரின் மகன் பிரபாகரன் என்பவரிடம் வாடகைக்கு வண்டி எடுத்தது மூலமாக அவரின் தாயார் செல்வி எனக்கு பழக்கம். வழக்கின் எதிரியின் மகன் பிரபாகரன் கடந்த 20.06.2019 என்னிடம் ரூ.3 லட்சம் வட்டிக்கு பணம் வாங்கினார் என்றாலும், மேற்படி கடன் தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100 க்கு ரூ.3 வட்டி விகிதம் மாதவட்டி கொடுத்து வந்தார் என்றால் சரியல்ல.

3.) மேற்படி கடனை என்னிடம் வாங்கும் பொழுது நிரப்பப்படாத கரூர் வைசியா வங்கியின் காசோலை எண். 000129 என்ற காசோலையை என்னிடம் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி தொகைக்கு வட்டி கொடுத்து வந்த நிலையில் கொரானா காலம் என்பதால் அவர் 10.08.2020 முதல் 10.01.2021 வரை வட்டி கொடுக்க முடியாததால் மேற்படி

கடன் தொகைக்கான வட்டி ரூ.50 ஆயிரத்திற்காக இவ்வழக்கின் எதிரி கணக்கு வைத்துள்ள கனரா வங்கியின் காசோலை எண். 291809 என்ற காசோலையை இந்த வழக்கின் எதிரியின் மகன் பிரபாகரன் என்னிடம் வந்து கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல.

4.) பின்பு இந்த வழக்கின் எதிரியின் மகன் பிரபாகரன் கடந்த 08.02.2021 ம் தேதி இந்த வழக்கு காசோலை தொகையை என்னிடம் திருப்பி கொடுத்துவிட்டு இந்த வழக்கு காசோலையை கொடுக்கும்படி கேட்டதற்கு நான் அசல் ரூ.3 லட்சத்தையும் கொடுத்துவிட்டு இரண்டு காசோலையையும் திரும்ப பெற்றுக் கொள் என்று சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஸ்ரீ கணேஷ் பைனான்ஸ் என்ற நிறுவனத்தை என் தம்பி பொன்னுச்சாமி நடத்தி வருகிறார் என்றாலும், அதில் நானும் ஒரு பங்குதாரர் என்று சொன்னால் சரியல்ல. என் தம்பி பொன்னுச்சாமி தான் அந்த நிறுவனத்தை நடத்தி வருகிறார்.

5.) மேற்படி நிறுவனத்தை என் தம்பி பொன்னுச்சாமி தான் நடத்தி வருகிறார் என்று நான் இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த சூழ்நிலையில் நானும், என் தம்பி பொன்னுச்சாமியும் இந்த வழக்கின் எதிரி பிரபாகரனுக்கு எதிராக சதி திட்டம் தீட்டி என்னிடம் வாங்கிய கடனுக்கு ஆதரவாக அவர் கொடுத்திருந்த நிரப்பப்படாத காசோலையை தவறாக பயன்படுத்தி அந்த காசோலையில் ரூ.8 லட்சம் என பிரபாகரன் என்பவர் கடன் வாங்கியது போல, என் தம்பி பொன்னுச்சாமியின் பெயருக்கு பூர்த்தி செய்து 11.02.2021 ம் தேதி என் தம்பி கணக்கு வைத்துள்ள ஆண்டிபட்டி கரூர் வைசியா வங்கியில் பணம் பெறுவதற்காக செலுத்தினார் என்றாலும், அன்றே இந்த வழக்கின் எதிரி எனக்கு கொடுத்த காசோலையையும் நான் கணக்கு வைத்துள்ள ஆண்டிபட்டி கரூர் வைசியா வங்கியில் பணம் பெறுவதற்காக செலுத்தினேன் என்றாலும் சரியல்ல. நான் பெற்ற காசோலையினை தான் 11.02.2021 ம் தேதி வங்கியில் செலுத்தினேன்.

6.) மேற்படி காசோலை Insufficient funds என்ற மேற்குறிப்புடன் 12.02.2021 ம் தேதி திருப்பப்பட்டது என்றால் சரிதான். ஆகையால் நானும் என் தம்பி பொன்னுச்சாமியும் 01.03.2021 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை இந்த வழக்கின் எதிரிக்கும், எதிரியின் மகன் பிரபாகரனுக்கும் அனுப்பப்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் பெற்ற காசோலைக்கு தான் மேற்படி தேதியில் நான் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினேன். என் தம்பி பெற்ற காசோலை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி இரண்டு வழக்கின் வழக்கறிஞர் அறிவிப்பையும் இந்த வழக்கின் எதிரி மகன்

03.03.2021 ம் தேதி பெற்றுக் கொண்டு என்னை நேரில் வந்து சந்தித்தார் என்று சொன்னாலும், நான் எனக்கு கொடுக்க வேண்டிய அசல் தொகை ரூ.3 லட்சத்தை கொடுத்துவிட்டால் நான் வழக்கை தாக்கல் செய்யமாட்டேன் என்றும் அதனால் பதில் அறிவிப்பு ஏதும் அனுப்ப தேவையில்லை என்றும் நான் கூறினேன் என்று சொன்னால் சரியல்ல.

7.) நான் சொன்னதைத் கேட்டுக் கொண்டு வழக்கின் எதிரி செல்வியின் மகன் பிரபாகரன் தனக்கு தெரிந்தவர்களிடம் இருந்து ரூ.3 லட்சத்தை கடன் பெற்றுவந்து 01.04.2021 ம் தேதி என்னிடம் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. பணத்தை பிரபாகரன் திருப்பி கொடுத்துவிட்டு இரண்டு காசோலைகளையும் கேட்ட போது நான் வீட்டில் தேடி எடுத்து தருகிறேன் என்று சொல்லிவிட்டு மேற்படி வழக்கை நானும் , என் தம்பியும் சேர்ந்து பொய்யாக தாக்கல் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல.

8.) என் தம்பி பொன்னுச்சாமி எதிரியின் மகன் பிரபாகரன் மீது தாக்கல் செய்த CC 43/2021 என்ற வழக்கு சமூகம் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்ற விபரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். ஆகையால் எதிரியின் மகன் பிரபாகரன் என் மீதும், என் தம்பி மீதும் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் 16.04.2021 புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி காவல் கண்காணிப்பாளரிடம் நீதிமன்றத்தில் வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்று கூறியதால் அவர் அந்த புகாரை நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறி முடித்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

9.) நான் மனுவில் சொன்னது போல எதிரி என்னிடம் 23.10.2020 ம் தேதி ரூ.50 ஆயிரம் கடன் வாங்கவில்லை என்றும், 23.02.2020 ல் திருப்பி தருவதாக பின் தேதியிட்டு வழக்கு காசோலை கொடுக்கப்படுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு காசோலை எதிரியின் மகன் பிரபாகரன் வாங்கிய கடனுக்கு கொடுக்க வேண்டிய வட்டி பாக்கிக்காக வழக்கு காசோலை கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வழக்கின் காசோலைக்குரிய பணத்தை திருப்பி செலுத்தியதால் எதிரி மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் பிரிவு 138 ன் கீழ் தண்டிக்கபடகூடியவர் அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கும் , என் தம்பி தாக்கல் செய்த வழக்கும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்றால் சரியல்ல. மேற்படி இரு வழக்குகளும் 14.04.2021 ம் தேதி சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தினை தூய கரங்களுடன் அனுகவில்லை என்றாலும்

**ஆகையால் நான் தாக்கல் செய்துள்ள மேற்படி வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னாலும் சரியல்ல.**

S/d.ராசையா

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2025.04.08 16:09:59 +0530

Judicial Magistrate ,
Andipatti.